## உங்கள் வியாபாரத்துக்கு ஏன் இயற்கை முக்கியமானது?

இலங்கையில் சுற்றுலாவைப் பொறுத்தமட்டில் இயற்கை மற்றும் வனஜீவராசிகள் அனுபவங்கள் போன்றன முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த அனுபவங்களைப் பெறுவதற்காக பல சுற்றுலாப் பிரயாணிகள் இலங்கைக்கு விஜயம் செய்கின்றனர்.

இயற்கையை பாதுகாப்பது என்பது உங்கள் வியாபாரத்தில் சிறந்த முதலீடாகும். சுற்றுலாப் பயணிகளுக்கு பெருமளவு வழங்கவும், உங்கள் பிரதேசத்தில் சுற்றுலாவை ஊக்குவிக்கவும் உதவியாக அமையும்.

சூழலில் உங்களின் வியாபாரம் தங்கியிருந்தால், அதனை பாதுகாப்பது முக்கியமானதாகும். இயற்கை வளங்கள் இழந்தால் அல்லது சேதமடைந்தால், உங்கள் வியாபாரத்தில் நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்பதுடன், சமூகத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தலாம். இது உங்கள் வியாபார சந்தைக்கு இடரை தோற்றுவிக்கக்கூடும்.

## இயற்கையை பாதுகாப்பதற்கு உங்களால் மேற்கொள்ளக்கூடிய இதர செயற்பாடுகள்

- துண்டுப்பிரசுரம் ஒன்றை வழங்கி அல்லது உறுதிமொழி மேற்கொள்ளுமாறு அவர்களை ஊக்குவித்து இதனை மேற்கொள்ளலாம்.
- பாதுகாப்பு திட்டங்களுக்கு நன்கொடை வழங்குவதற்காக நன்கொடை பெட்டி ஒன்றை வைத்து, உங்கள் விருந்தினர்களுக்கு வாய்ப்பொன்றை உங்களால் வழங்க முடியும்.
- உங்கள் தோட்டத்தில் செயற்கை உரத்தைப் பயன்படுத்துவதை தவிர்க்கவும்.

விலங்குகள் மற்றும் தாவரங்களை அவற்றின் இயற்கையானஇருப்பிடங்களிலிருந்துஅகற்றுவதை தவிர்க்கவும். பாதுகாக்கப்பட்ட உயிரினங்களை நுகர்வதை அல்லது பயன்படுத்துவதை, காட்சிப் பொருட்களாக வைப்பது, வனஜீவராசிகளை வியாபாரத்துக்குட்படுத்துவது அல்லது வனஜீவராசி மூலப்பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதை தவிர்க்கவும்.

**SLTDA இனால் வெளியிடப்பட்ட 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த புள்ளி விவர அறிக்கையின் பிரகாரம், இலங்கையின் வனஜீவராசிகள் பூங்காக்களுக்கு சுமார் 1.1 மில்லியன் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் விஜயம் செய்துள்ளதுடன், அதனூடாக USD 12.3 மில்லியனுக்கு அதிகமான தொகை (ரூ 2 பில்லியன்) வருமானமாக பெறப்பட்டுள்ளது.**

### மேலும் அறிந்து கொள்வதற்கு

How Tourism Benefits Nature and Wildlife

The Surprising Benefits of Wildlife Tourism

The Business Case for Nature

**நீங்கள் இல்லை என்றால், யார்?இன்றே செயல்படுங்கள் 👉 நிலைத்தன்மையை சிந்தியுங்கள் 🌏**


USAID Indo-Pacific Opportunity Project (IPOP)
International Development Group LLC

56/6A Horton Place
Colombo 7, Sri Lanka
Tel: 94-112697052


USAID FROM THE AMERICAN PEOPLE

# இயற்கையை பாதுகாக்க உங்களால் என்ன செய்யலாம்



USAID
FROM THE AMERICAN PEOPLE

# இயற்கையை பாதுகாக்க என்ன செய்யலாம்

1. இலங்கையில் கிடைக்கும் உள்நாட்டு தாவரங்கள் அல்லது பூர்வீக தாவர இனங்களை உங்கள் நிலத்தில் நடவும்

2. ஆக்கிரமிப்பு விலங்குகள் மற்றும் தாவரங்களைப் பற்றி அறிந்து அவற்றை உங்கள் இடத்திலிருந்து அகற்றவும்

3. உங்கள் பகுதியில் உள்ள உள்ளூர் இயற்கை அனுபவங்களைப் பற்றி தெரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள், அதனால் உங்கள் விருந்தினர்களுக்கு அந்த இயற்கை அனுபவங்களைப் பரிந்துரை செய்யலாம்

4. சுற்றுச்சூழலுடன் ஒன்றாக கலந்து இருக்க உங்கள் இடத்தில் பழுப்பு மற்றும் பச்சை போன்ற இயற்கை வண்ணங்களைப் பயன்படுத்தவும்

5. இயற்கையை மதித்து, விலங்குகளுடன் பழகுவதற்கான விதிகளைப் பின்பற்றுவதன் மூலம் உங்கள் விருந்தினர்களை பொறுப்பான சுற்றுலா பயணிகளாக இருக்க ஊக்குவிக்கவும்

6. இயற்கை மற்றும் விலங்கு பாதுகாப்பில் கவனம் செலுத்தும் திட்டங்கள் மற்றும் அரசு நிறுவனங்களுடன் ஒருங்கிணைக்கவும்

7. பல்வேறு மனித வனவிலங்கு மோதல்கள் மற்றும் அத்தகைய சூழ்நிலைகளை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து உங்கள் ஊழியர்களுக்கு தெரியப்படுத்துங்கள்



மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பெரிய மரங்களை ஒரு வீட்டின் சூரிய வெளிச்சம் வரும் பக்கத்தில் நடுவது நிழலை உருவாக்குகிறது, வெப்பமான கோடையில் AC செலவுகளை 30% வரை குறைக்கிறது.

சதுப்பு நிலங்களைப் பாதுகாப்பதின் மூலம் வெள்ள அபாயத்தை குறைக்க முடியும் மற்றும் சூறாவளியின் சேத அபாயங்களைக் குறைக்க செயல்படுகிறது., மற்றும் சராசரியாக ஒரு ஆண்டிற்கு $464 (ஒரு ஹெக்டேருக்கு) பொருளாதார நன்மையைக் தருகிறது.